**வட்டாரக்கல்வி அலுவலர் பணியிடங்கள் 50% பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்படுதல் அரசாணை**

**சுருக்கம்**


பள்ளிக்கல்வி - தமிழ்நாடு தொடக்கக்கல்வி சார்நிலைப்பணி வட்டாரக்கல்வி அலுவலர் பணியிடங்கள் 50% பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் நிரப்படுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பள்ளிக்கல்வி தொ.க.1(1) த்துறை**

அரசாணை (1படி) எண்.82

நாள் : 20.05.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050, விகாரி வருடம்,
வைகாசி மாதம், 6-ம் நாள்

**படிக்கப்பட்டவை :**

1. அரசாணை (நிலை) எண1383, கல்வித்துறை நாள் 23.08.1988.
2. அரசாணை (நிலை) எண்.499, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள்.26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்182, பள்ளிக்கல்வித்துறை நாள் 25.07.2007.
4. அரசாணை (நிலை) எண்.27, பள்ளிக்கல்வித்துறை நாள் 08.02.2008.
5. அரசாணை (நிலை) எண்126, பள்ளிக்கல்வித்துறை நாள் 02.07.2018.
6. அரசாணை (நிலை) எண்20, பள்ளிக்கல்வித்துறை நாள் 07.02.2019.
7. அரசாணை (நிலை) எண்101, பள்ளிக்கல்வி (வரவு, செலவு)த்துறை நாள் 18.05.2018.
8. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.024520/அ1/2018 நாள் :02.04.2019

---

**ஆணை :**

பள்ளிக்கல்வித்துறையின் ஒரு அங்கமாக உள்ள தொடக்கக்கல்வித்துறையில் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளை ஆய்வு செய்யவும் மேற்பார்வையிடவும் ஒன்றிய அளவில் உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டு இப்பணியிடம் தமிழ்நாடு தொடக்கக்கல்வி சார்நிலைப்பணிகள் சிறப்பு விதிகளில் வகுப்பு 1 வகை 1-ல் வகைப்படுத்தப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு தொடக்கப்பள்ளி சார்நிலைப்பணி சிறப்பு விதிகளில் வகுப்பு 1 வகை 2ல் உள்ள நடுநிலைப்பள்ளித் தலைமையாசியர் பணியிலிருந்து பணிமாறுதல் மூலம் உதவி தொடக்கக்கல்வி அலுவலர்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உதவி தொடக்ககல்வி அலுவலர் பணியிடங்களை 50 விழுக்காடு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிலிருந்து பணிமாறுதல் மூலமாகவும் 50 விழுக்காடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலமாகவும் நிரப்ப வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இப்பணியிடத்தினை 70 விழுக்காடு பணிமாறுதல் மூலமாகவும் 30 விழுக்காடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலமாகவும் நிரப்பப்பட வேண்டும் என திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

5. உதவி தொடக்கக்கல்வி அலுவலர் பணியிடமானது வட்டாரக்கல்வி அலுவலர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு தொடக்கக்கல்வி சார்நிலை சிறப்பு விதிகளுக்கு உரிய திருத்தம் செய்யப்பட்டு மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வட்டாரக்கல்வி அலுவலர் பணியிடங்கள் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிலிருந்து பதவி உயர்வு மூலம் நிரப்பப்படும் என தமிழ்நாடு தொடக்கக்கல்வி சார்நிலைப்பணி சிறப்பு விதிகளுக்கு திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

7. மேலே எட்டாதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக்கல்வி இயக்குநர் வட்டாரக்கல்வி அலுவலர்கள் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவித்துள்ளர்.

- பள்ளிகளை ஆய்வு செய்வது
- மேற்பார்வையிடுவது
- ஒன்றியத்தில் புதிய பள்ளிகள் தொடங்க கருத்துரு பரிந்துரைப்பது.
- பல்துறை அலுவலர்கள் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்வது.
- ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமைப் பட்டியல் தயாரிப்பது.
- ஊதியம் நிர்ணயம் ஊதியம் பெற்றுத் தருதல் , விடுப்பு அனுமதித்தல்.
- உதவி பெறும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உயர்கல்வி பயில ஒப்புதல் அளித்தல்.
- ஆசிரியர்கள் பணிப்பதிவேடு பராமரித்தல்.
- அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் உரிய மாணவர்களுக்கு உரிய நேரத்தில் சென்று அடைய உதவுதல்.
- சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்து டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு பரிந்துரைப்பது.

- ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதிய கருத்துரு தயாரித்தல் , ஓய்வூதிய பணப்பலன்கள் பெற்று வழங்குதல் முதலிய பணிகளை மேற்கொள்ளகின்றனர்.
- ஆரசாணை (நிலை) எண்.101 பள்ளிக்கல்வி (வரவு, செலவு) துறை நாள் 18.05.2018ன்படி உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் மெட்ரிக் பள்ளி ஆகிய பள்ளிகளையும் மேற்பார்வையிடுகின்றனர்.
- மேற்காண் பணிகள் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இல்லை மேற்குறிப்பிட்டுள்ள நிர்வாகம் சார்ந்த பொறுப்புகளை பல -------------------- மேற்கொண்டுள்ள நடுநிலைப்பள்ளி தலைலை ----------------- மேற்கொள்ளுவதில் தொய்வு காணப்படுகிறது.

8. மேலும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்படும் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கான விகிதத்தை ஏற்கனவே இருப்பதிலிருந்து சற்று உயர்த்தி வழங்கினால் நிர்வாகம் சிறப்பாக அமைய வாய்ப்பு ஏற்படும் என்றும் எனவே நிர்வாக நலன்கருதி ஒவ்வொரு ஆண்டும் ஜீன் முதல் தேதயின்று காலி ஏற்படும் வட்டாரக்கல்வி கல்வி அலுவலர் பணியிடத்தில் 30 விழுக்காடு ஆசிரியர் தேர்வு வாரியத்தில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டு வந்துள்ளதை மாற்றி 50 விழுக்காடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் மேற்கொள்ள அரசாணை வழங்குமாறும் தொடக்கக்கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

9. தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி உயர்நிலைபள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் மெட்ரிக் பள்ளி ஆகிய பள்ளிகளையும் வட்டாரக்கல்வி அலுவலர்கள் மேற்பார்வையிடுவதால் வட்டாரக்கல்வி அலுவலர்களை நேரடி நியமனம் மூலமாக நியமனம் செய்து துறையின் நிர்வாக நலனுக்கு உகந்ததாக அமையும் என்பதால் அதனை எற்கலாமென முடிவு செய்து அவ்வாறே வட்டாரக் கல்வி அலுவலர் மொத்த காலிப்பணியிடங்களில் , 70 வழுக்காடு பணியிடத்தினை நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிலிருந்து பணிமாறுதல் மூலமாகவும், 30 விழுக்காடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலமாகவும் நிரப்ப ஆணை வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.27 பள்ளிக்கல்வி (ஜி2) துறை நாள் 08.02.2008.ஐ இரத்து செய்து பதிலிட்ட கற்றீாக ( Supersession ) ஒவ்வொரு ஆண்டும் ஜீன் முதல் தேதியன்று ஏற்படும் வட்டாரக்கல்வி அலுவலர் மொத்த காலிப்பணியிடங்களில் 50 விழுக்காடு பணியிடத்தினை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக நேரடி நியமனம் மூலமாகவும் நிரப்பலாம் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்